DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.STC.172/2025

Prosecution witness – PW.1

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.துரைமுத்துராஜன் | Caste: | |
| Father's Name | : முத்துராமலிங்கம் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

25.05.2026 – 11.30 AM

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>:–

1. நான் தாதாகுளம் கிராமத்தில் குடியிருந்து பஞ்சாயத்து செயலாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது மருமகன்தான். எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எவ்வித முன்விரோதமும் கிடையாது. சுமார் 1 ஆண்டுக்கு முன்பு ஒரு நாள் காலை 10.00 மணியளவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இருந்தபோது கூட்டமாக 10 க்கும் மேற்பட்ட நபர்கள் கூச்சலிட்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

2. நான் கூட்டத்திற்குள் சென்று பார்த்தபோது கூட்டத்தில் இருந்த யாரோ என்னை கீழே தள்ளிவிட்டார்கள். நான் கீழே விழுந்ததில் எனக்கு லேசான காயம்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயம் லேசான காயம் என்பதால் மருத்துவமனை செல்லவில்லை. இது குறித்து கமுதி போலிசாரிடம் சொன்னபோது போலீசார் என்னிடம் ஒரு வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனுவில் என்ன சங்கதிகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி **கையொப்பம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளிக்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-

1. 02.06.2025 காலை 10.00 மணியளவில் நான் கமுதி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வேலையில் இருந்த போது ஆஜர் எதிரி அங்கு வந்து என்னை பார்த்து ஆபாசமாக பேசி என்னை அடித்து கீழே தள்ளிவிட்டதில் எனது வலது கை எலும்பில் அடிபட்டதாகவும் அங்கிருந்த முருகன், குருமூர்த்தி ஆகியோர் விலக்கியதாகவும், புகார் மனுவிலும் போலீசார் விசாரித்தபோதும் சொல்லிவிட்டு தற்போது எதிரி எனக்கு உறவினர்கள் என்பதால் எதிரியுடன் சமாதானம் செய்து கொண்டு வழக்கிலிருந்து எதிரியைக் காப்பாற்ற உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.25 18:46:39 +0530